**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.4/2016**

**பி.வா.சா. –4– முத்துச்சாமி**

**நாள். 11.07.2025**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

இல்லை என்று வாதியின் வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

**பி.வா.சா.4 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தில் 2 வது பத்தியில் சொல்லியுள்ள உறவு முறைகள் அனைத்தும் சரி என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் ஆறுமுக கவுண்டர் என்றால் சரிதான். எனது தகப்பனாருடன் பிறந்த எனது பெரியப்பா அழகிய கவுண்டர் என்றால் சரிதான். அழகிய கவுண்டரும் , நாங்களும் எங்கள் குடும்ப சொத்து சம்பந்தமாக 07.12.1976 அன்று ஒரு பாகப்பிரிவினை பத்திரம் எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அது வா.சா.ஆ.2 என்றால் சரிதான். நான் 8 ஆம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். 07.12.1976 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தின் படி அந்த பத்திரத்தில் A அட்டவணையில் காட்டியுள்ள சொத்துக்கள் அனைத்தும் எனது பெரியப்பா அழகிய கவுண்டருக்கும், அவருடை பிள்ளைகளுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் B அட்டவணையில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் என் தகப்பனார் ஆறுமுக கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் ஆறுமுக கவுண்டருக்கு மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் ஒதுக்கப்பட்ட B அட்டவணை சொத்து தான் இந்த தாவாவில் தாவா சொத்துக்களாக வாதியால் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள C அட்டவணை சொத்துக்கள் எனது தாயார் நல்லம்மாளுக்கும் எனக்கும் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் D அட்டவணையில் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் ஆறுமுக கவுண்டரின் இளைய தாரத்து மனைவி மீனாட்சியம்மாளின் மகனான 1 ஆம் வாதியான ராஜண்ணாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். 07.12.1976 பாகப்பிரிவினை பத்திரத்தின் படி ஒதுக்கப்பட்ட சொத்துக்களை 1976 ஆம் ஆண்டில் இருந்து அவர் அவர் பாகத்தை அவர் அவர் சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான்.

மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் படி அவர் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் மற்றவர்கள் பாகம் கேட்கக் கூடாது என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு ஒதுக்கியதை நான் கேட்க கூடாதா? . 1976 ஆம் ஆண்டுக்கு பின்னர் பொதுக் குடும்பம் என்றோ, பொது அனுபவம் என்றோ கிடையாது என்றால் சரிதான். பாகபிரிவினை பத்திரத்தின் படி C அட்டவணையில் எனக்கு கிடைத்த சொத்துக்களை நான் 3 ஆம் தரப்பினருக்கு குத்தகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரிதான். 1976 ஆம் ஆண்டில் மேற்படி C அட்டவணை சொத்தை குத்தகைக்கு விட்டுவிட்டு தஞ்சாவூருக்கு சென்று குடும்பத்துடன் தங்கி பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். என் உடன் பிறந்த சகோதரரிகளான 2 மற்றும் 3 வாதிகள் அவர்கள் திருமணம் முடிந்த பிறகு அவர்கள் கணவருடன் தனித்தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1 ஆம் வாதி ராஜண்ணா தனக்கு மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் கிடைத்த சொத்துக்களை 1976 ஆம் ஆண்டு 3 ஆம் தரப்பினருக்கு குத்தகைக்கு விட்டுவிட்டு ஒசூரில் சென்று நிரந்தரமாக தங்கி பைனான்ஸ் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது தாயார் நல்லம்மாள் இறந்து 20 வருடம் ஆகிவிட்டது. எனது தகப்பனார் ஆறுமுகம் கவுண்டருக்கும் அவருடைய இரண்டாம் மனைவி மீனாட்சியம்மாளின் மகளான இந்த வழக்கின் 2 ஆம் வாதியான பழனியம்மாள் மற்றும் 2 ஆம் பிரதிவாதியான கலையரசி என்ற கருப்பாயி என்ற இரண்டு மகள்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பழனியம்மாள் தன் கணவருடன் நிரந்தரமாக தனியாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதியான கலையரசி என்ற கருப்பாயிக்கு தங்கவேல் என்பவரை மணம் முடித்து வைத்து ஞாபகம் உள்ளதா என்றால் உள்ளது. 2 ஆம் பிரதிவாதி கலையரசிக்கும் தங்கவேலுக்கும் பிறந்த மகள் தான் 3 ஆம் பிரதிவாதி பானுப்பிரியா என்றால் சரிதான். மேற்படி 3 ஆம் பிரதிவாதி பிறந்த சிறிது நாளில் அவரின் தந்தை தங்கவேல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனவே, எனது தந்தை ஆறுமுக கவுண்டர், மீனாட்சியம்மாள், கலையரசி மற்றும் பானுப்பிரியா அனைவரும் கூட்டாக ஒரே இடத்தில் வசித்து வந்தார்கள் என்றால் தவறு. எனது சித்தி மீனாட்சியம்மாளுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் இருந்ததா என்றால் இருத்தது. மேற்படி மீனாட்சியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து எனது தகப்பனாருக்கு மீனாட்சியம்மாள் ஒரு உயில் சாசனம் எழுதி வைத்திருப்பது எனக்கு தெரியாது. மேற்படி உயில் சாசனத்தை மீனாட்சியம்மாள் ரத்து செய்துவிட்டு மீனாட்சியம்மாள் தன்னுடைய மகளான 2 ஆம் பிரதிவாதி பெயரில் பி.வா.சா,2 உயில் ஆவணத்தை எழுதி வைத்தவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.2 ல் மீனாட்சியம்மாள் புகைப்படம் உள்ளது என்றால் சரிதான். என் அப்பாவின் சாட்சி கையொப்பம் அதில் இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பி.வாசாஆ. 2 உயில் ஆவணத்தை மீனாட்சியம்மாள் எழுதி வைத்த பின்னர் 27.04.2011 அன்று

இறந்துவிட்டார் என்றால் அவர் இறந்தது தெரியும் அந்த உயில் பற்றி எனக்கு தெரியாது. எனது சித்தி இறப்பிற்குப் பின்னர் எனது தகப்பனாரும், 2 ஆம் பிரதிவாதி கலையரசியும், 3 ஆம் பிரதிவாதி பானுப்பிரியாவும் ஒரே குடும்பமாக வசித்து வந்தார்கள் என்றால் தவறு. என்னிடம் காட்டப்படுகின்ற பி.வாசா.ஆ.3 உள்ள ஆவணத்தில் உள்ள கையொப்பம் தான் என்றால் இந்த ஆவணத்தை என் அப்பா எழுதவில்லை. என் அப்பா ஆறுமுககவுண்டர் நன்றாக எழுதப்படிக் தெரிந்தவர் என்றால் தவறு அவருக்கு ஓரளவுக்கு தான் எழுதப்படிக்க தெரியும். பி.வாசா.ஆ.3 எனது அப்பாவின் புகைப்படம் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தை எங்கள் குடும்பத்தில் உள்ள எல்லாரிடமும் கலந்து பேசி தகவல் சொல்லிவிட்டு தான் 3 ஆம் பிரதிவாதி பெயரில் என் அப்பா உயில் எழுதி வைத்தார் என்றால் தவறு. எனது அப்பா ஆறுமுக கவுண்டர் எந்த வயதில் இறந்தார் என்றால் சரியாக தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் 5 பாராவில் ஆறுமுக கவுண்டர் தனது 90 வயதில் 22.11.2011 அன்று இறந்துவிட்டார் என்று நான் சொல்லியிருக்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பி.வாசா.ஆ.3 உயில் எழுதி வைத்த பிறகு ஒன்றரை வருடம் கழித்து இறந்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. பி.வாசா.ஆ 3 ஆவணம் எழுதிய சமயத்தில் என் தகப்பனார் மருத்துவமனையில் சேர்க்கப்படவில்லை என்றும், அவர் 90 வயதான நிலையில் வீட்டில் இருந்தார் என்றும், சொன்னால் சரிதான். எனது தகப்பனார் 22.11.2011 அன்று என் அப்பா இறந்த தேதியில் என் அப்பாவின் இறப்பில் நானோ, ராஜண்ணாவோ மற்ற வாதிகளோ கலந்து கொள்ளவில்லை என்றால் தவறு என்றால் தவறு. கலந்து கொண்டோம். நாங்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை என்றும், 2 ஆம் வாதியும், 2,3 பிரதிவாதிகளும் அவருக்கு வேண்டியவர்கள் மட்டும் தான் எனது அப்பாவின் உடலை எடுத்து சென்று நல்லடக்கம் செய்தார்கள் என்றால் தவறு. 1976 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரம் எழுதிய பின்னர் எனது அப்பாவை நானோ, ராஜண்ணாவோ எங்களை சார்ந்தவர்களோ பாராமரிக்கவில்லை என்றும், எனது அப்பா 2,3 பிரதிவாதிகள் பராமரிப்பில் தான் இருந்து வந்தார் என்றால் தவறு. 1976 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தின் படி எனது தகப்பனாருக்கு கிடைத்த தனிப்பட்ட B அட்டவணை சொத்தை தனது பேத்தியான 3 ஆம் பிரதிவாதிக்கு உயில் சாசனம் எழுதி வைத்து விட்டாதால் அவரின் இறப்பிற்கு பிறகு அந்த சாசனம் நடைமுறைக்கு வந்ததால் அதில் கண்டுள்ள சொத்துக்களில் நாங்கள் உரிமை கோர முடியாது என்றால் தவறு. எனவே, எனது தகப்பனார் எழுதிய மேற்படி உயில் சட்டப்படி செல்லக்கூடியது என்றும் அது செல்லாது என்று சொல்வதற்கு எங்களுக்கு எந்த வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. சர்வே எண்.446/1 ல் கட்டுப்பட்ட மொத்த பரப்பு 33 ஏக்கர் 63 செண்டு நிலம் என்றால் சரிதான். அந்த மொத்த பரப்பில் கிழ புறம் உள்ள 16 ஏக்கர் 81 செண்டு நிலம் தான் தாவா சொத்து என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த பின்னர் உயில் நடைமுறைக்கு

வந்த காரணத்தால் 3 ஆம் பிரதிவாதி பெயருக்கு வருவாய் துறை பட்டா பி.வாசா,4 வழங்கியுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்திற்கு பி.வா.சா.ஆ.5 ன் படி கிஸ்தீ 3 ஆம் பிரதிவாதி செலுத்தியுள்ளார் என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படுகின்ற பி.வா.சா.ஆ.6 ஆவணம் எனது தகப்பனார் பெயரில் உள்ள வங்கி கணக்கு புத்தகம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2011 ஆம் ஆண்டு எனது அப்பா இறப்பிற்கு பின்னர் நான் பாகம் கோரி தனியாக வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றும், தனியாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2016 ஆம் ஆண்டு இந்த தாவாவில் எனக்கு அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் முன்னிலை ஆகாததால் எனக்கு எதிராக ஒருதலை தரப்பாக உத்தரவானது பற்றி எனக்கு தெரியாது. வழக்கின் வாதிகள் மற்றம் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரித்த முடித்த பின்னர் மிகவும் கால தாமதமாக இந்த வழக்கில் மேற்படி ஒரு தலை தரப்பு ரத்து செய்து இந்த வழக்கை எதிர்வழக்காடுகிறேன் என்றால் தவறு. 5 ஆம் வாதி சுரேஷ் என்பவரின் துர் போதனை மற்றும் துண்டுதலில் காரணமாக தான் தற்போது இந்த வழக்கில் எதிர்வழக்காடுகிறேன் என்றால் தவறு. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை 2 ஆம் பக்கத்தில் வாதியின் தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றால் தெரியாமல் சொல்லிவிட்டேன். தாவா சொத்துக்கள் 3 ஆம் பிரதிவாதிக்கு மட்டுமே சொந்தம் என்றும் அதில் நானும் மற்ற நபர்களும் பாகம் கோர முடியாது என்றால் தவறு.

**4 முதல் 7 வரையான பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரால் மேற்படி 2 மற்றும் 3 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை எங்கள் தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.07.11 17:53:43 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.